| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 19/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-2 | Village: | |
| Name | : ஹரிஹரன் | Age | :24 |
| Father's/Husband's Name | : பாண்டியன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21/08/2023**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி உஷா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. போலிசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் 08/06/2019 ம் தேதி மாலை 06.00 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அ.சா.1 எனது பெரியப்பா மகன் ஆவார். குறிச்சிமலலையில் இருந்து எதற்காக திருப்பனந்தாளுக்கு சென்றோம் என்றால் செருப்பு வாங்குவதற்காக சென்றோம். எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை நடந்த விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், அ.சா.1 ம் எந்த வாகனத்தில் திருப்பனந்தாளுக்கு சென்றோம் என்றால் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். நான் சம்பவத்தின் போது சென்ற வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் பதிவெண் தெரியாது.

2. எனக்கும், அ.சா.1 ம் ஏற்பட்ட காயத்திற்காக நாங்கள் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தோம் என்றால் 1 நாள் சிகிச்சையில் இருந்தோம். மருத்துவமனையில் இருந்தபோது

போலிசார் வந்து விசாரித்தார்களா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. எதிரி முருகன் அ.சா.1 க்கு எதிராக புகார் அளித்து அந்த வழக்கில் அவர் கைது செய்யப்பட்டு அவர் ஒருவார காலம் திருவிடைமருதூர் கிளைச்சிறையில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. போர்ஷெட்டில் நானும் எனது பெரியப்பா மகனும் மதுபோதையில் சென்று தகாத வார்த்தையால் பேசிக்கொண்டிருந்ததை அந்த பக்கமாக தண்ணீர் பாய்ச்ச வந்த எதிரிகள் கேட்டதால் நாங்கள் தான் அவர்களை அசிங்கமாக திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தோம் என்றாலும், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நானும் எனது பெரியப்பா மகனும் மதுபோதையில் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது அ.சா.1 பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் எங்களை திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும், எதிரிகள் மீது அ.சா.1 அளித்த பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் மனு எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் முதலில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். பின்னர் காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 19/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : ராஜவேல் | Age | :25 |
| Father's/Husband's Name | : மணி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21/08/2023**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி உஷா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் குறிச்சிமலை கிராமத்தில் வசித்து வருகிறேன். புகார் மனுவை யார் எழுதினார் என்றால் நான்தான் எழுதினேன். புகார் மனுவை எங்கு வைத்து எழுதினேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். குறிச்சிமலையில் இருந்து திருப்பனந்தாளுக்கு திருமங்களக்குடி வழியாக செல்லலாம் என்றால் சரிதான். நான் சம்பவத்தின் போது சென்ற வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் பதிவெண் தெரியாது. SPLENDER இரு சக்கர வாகனத்தில் சென்றேன்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் யார் யார் இருந்தோம் என்றால் நானும், ஹரிஹரனும் இருந்தோம். நான் திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் முதலில் காவல் நிலையம் சென்றுவிட்டு பின்னர் திருவிடைமருதூர் அரசு

மருத்துவமனை சென்றேன். எதிரி முருகன் எனக்கு எதிராக புகார் அளித்து அந்த வழக்கில் கைது செய்யப்பட்டு நான் ஒருவார காலம் திருவிடைமருதூர் கிளைச்சிறையில் இருந்தேன் என்றால் சரிதான். போர்ஷெட்டில் நானும் எனது நண்பனும் மதுபோதையில் சென்று தகாத வார்த்தையால் பேசிக்கொண்டிருந்ததை அந்த பக்கமாக தண்ணீர் பாய்ச்ச வந்த எதிரிகள் கேட்டதால் நாங்கள் தான் அவர்களை அசிங்கமாக திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தோம் என்றாலும், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. நானும் எனது நண்பனும் மதுபோதையில் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் என்னை தாக்கியதற்கு பயன்படுத்தியதாக சொல்லும் அரிவாள் மற்றும் குச்சியை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் அரிவாளை போலிசாரிடம் ஒப்படைத்தேன். நான் வீடியோ எடுப்பதற்கு பயன்படுத்திய செல்போன் எண்ணை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 03.00 மணி இருக்கும். நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் எங்களை திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும், எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**